கால்களில் எழுந்து நில்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இங்கே, சரியாக அந்த மனிதருக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் அம்மாவை நாம் எடுத்துக்கொள்வோம், மற்றும்...? ...உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள் [ஒலிநாடாவில் காலியிடம்] வீட்டிற்குச் சென்று... நாமத்தில் குணமடையுங்கள் [ஒலிநாடாவில் காலியிடம்]

நான் நீங்கள்...?... செல்வதைப் பார்த்தேன், இதை நினைத்துக்கொண்டு நீங்கள் இரவில் தூங்குகிறீர்கள். அது சரிதானே? அப்படி இருந்தால், உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள்... [ஒலிநாடாவில் காலியிடம்]

அங்கே அமர்ந்திருக்கும் கறுப்பினச் சிறுவனே, அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? ஆம், நீதான். பிசாசினால் நீ வதைக்கப்படுகிறாய். அது சரிதானே? சாத்தான் உன்னை எப்போதும் வதைக்கிறான், நீ ஒரு புதிய விசுவாசிதான். அது சரிதானே? அது சரிதானே? பிசாசிடமிருந்து நீ விடுதலையாக விரும்புகிறாயா?

# பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுதல்

## LED BY THE HOLY SPIRIT

52-0727

ஞாயிற்றுக்கிழமை மாலை,
ஜூலை 27, 1952

சீயோன் பென்டன் உயர்நிலைப் பள்ளி
உடற்பயிற்சிக் கூடம், சீயோன்,
இல்லினாய்ஸ், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுதல் (52-0727)

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களும் வந்தனங்களும். அவருடைய நிகரற்ற மகிமையும் இரக்கமும் உங்கள் அனைவர் மீதும் தங்கியிருப்பதாக.

நீங்கள் புறப்படுவதற்கு சற்று முன்பாக, சகோதரர் பாக்ஸ்டர், அருகிலேயே இருங்கள்; நான் உங்களிடம் ஒரு நிமிடம் பேச விரும்புகிறேன்.

நான் சகோதரர் பாக்ஸ்டருடன் பல ஆண்டுகளாக இணைந்து செயல்பட்டு வருகிறேன். நாங்கள் நெருக்கமாக இணைந்து



சரி. வாருங்கள், ஐயா. நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக் கிறீர்களா, அம்மா? ஓ, இப்போது என்ன நடக்க முடியும்? [ஒலிநாடாவில் காலியிடம்]

ஐயா, அந்த இருதய நோயிலிருந்து நீங்கள் விடுபட விரும்புகிறீர்களா? ஓ, விரும்பு கிறீர்களா? இப்போது உங்கள் சுகத்தை ஏற்றுக்கொண்டு, இயேசுவின் நாமத்தில் சென்று குணமடையுங்கள்.

“தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக” என்று சொல்வோம். [ஒலிநாடாவில் காலியிடம்]

வயிற்றுப் பிரச்சினையும் இருக்கிறது. அது சரிதானே, ஐயா? அது சரிதானே? உங்களுக்கு வயிற்றுப் பிரச்சினை இருக்கிறதா? எழுந்து நில்லுங்கள். இப்போது வீட்டிற்குச் சென்று கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் குணமடையுங்கள்.

சிறுநீர்ப்பை பிரச்சினையுடன் உங்களுக்குச் சரியாகப் பின்னால் அமர்ந்திருக்கும் அந்த அம்மா, நீங்களும் விரும்பினால் வீட்டிற்குச் சென்று குணமடையலாம். அம்மா, உங்கள்

உணர்ந்திருக்கிறீர்கள். அது சரிதானே? அது சரிதான்.

இப்போது, நீங்கள் உங்கள் முதுகில் ஒரு பிரச்சினையால் அவதிப்படுகிறீர்கள். அது சரிதானே? உங்களுக்கு மலக்குடல் சம்பந்தமான ஏதோ ஒரு பிரச்சினை இல்லையா? அது சரிதானே? மூலநோய் போல? அது சரிதானே? நீங்கள் விட்டுவிட வேண்டிய ஒரு பழக்கமும் உங்களுக்கு இருக்கிறது: சிகரெட் குடிப்பது. நீங்கள் அதைச் செய்வீர்களா? அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சென்று சுகமடையுங்கள்.

"தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று சொல்வோம். ஓ, நான் அவரை எப்படி நேசிக்கிறேன், நான் அவரை எப்படி ஆராதிக்கிறேன்.

*46* வாருங்கள், அம்மா. நீங்கள் குணமடைய விரும்புகிறீர்களா? [ஒலிநாடாவில் காலியிடம்]

"தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக."



சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அழியாத கிறிஸ்தவ அன்பினால் நாம் ஒருவரையொருவர் நேசிக்கக் கற்றுக்கொண்டோம், நாம் ஒருவரிலொருவர் கொண்டிருக்கும் ஐக்கியமும் அன்பும் அப்படிப்பட்டது. மேலும் நான்-நான் இன்று மதியம் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக் குறித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்.

மேலும் சகோதரர் பாக்ஸ்டர், உங்களிடம் கேட்பது அதிகப்படியானது இல்லை என்றால், நீங்கள் வந்து எனக்குப் பிடித்த பாடலை மட்டும் பாட வேண்டும் என்று விரும்புகிறேன். அது சகோதரர் பாக்ஸ்டருக்கும் எனக்கும் நண்பராக இருந்த ஒருவரால் எழுதப்பட்டது. ஒரு நாள் இரவு அவருக்கு உந்துதல் ஏற்பட்டபோது, ஒரு சோளக்காட்டில் இந்தப் பாடலை அவர் எழுதினார்: "Down From His Glory" (அவரது மகிமையிலிருந்து கீழே). அதைச் செய்வீர்களா, சகோதரர் பாக்ஸ்டர்? நன்றி, சகோதரர் பாக்ஸ்டர்.

[சகோதரர் பாக்ஸ்டர் பேசுகிறார், பின்னர் பாடுகிறார்: "அவரது மகிமையிலிருந்து கீழே."]

2 நானும் மீண்டும் அங்கே சென்று விட்டேன். அதை அவர்கள் அந்தப் பதிவில் (ரெக்கார்டிங்கில்) பதிவு செய்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன், என்றாவது ஒரு நாள் அதை நான் மீண்டும் கேட்பேன். வரவிருக்கும் பல நாட்களுக்கு அதை நான் நினைவில் கொள்வேன். அது எப்படி முடிந்தது, அங்கிருந்த அந்தப் பெண்கள், அந்த உயர்ந்த ஆல்டோவை (alto) கொண்டு வந்தது—அங்கு அதன் சுருதி. ஆச்சரியமாக இருக்கிறது.

சற்று யோசித்துப் பாருங்கள், அந்த மாபெரும் சிருஷ்டிகர் என் இரட்சகரானார். ஓ, என் தேவனே. அதை நினைக்கும்போது என் இதயம் சிலிர்க்கிறது—என்னை மீட்பதற்காக தேவன் எப்படித் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டு, பூமிக்கு இறங்கி வந்து, மாம்ச சரீரத்தில் வாசம் செய்தார் என்று. தொலைந்து போன, முற்றிலும் தகுதியற்றவன்; அந்த ஒரே தகுதியானவர், பாவ வாழ்க்கையிலிருந்து நம்மை மீட்பதற்காகக் கீழே இறங்கி வந்தார். அது... அது இன்னும்... ஆச்சரியப் படுவதற் கில்லை "கண் காணவுமில்லை, காது



நேசிக்கிறீர்களா? சரி, உங்கள் கைகளை உயர்த்தி, “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று சொல்வோம். மக்கள் தேவனை மகிமைப் படுத்தினார்கள். இந்த மனிதர் குணமடைந்தது மட்டுமல்ல, அவருடைய பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிட்டன. அவர் மரித்திருந்தார் இப்போது உயிருடன் இருக்கிறார். அவர் காணாமற்போயிருந்தார் இப்போது கண்டு பிடிக்கப் பட்டார். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

வாருங்கள், ஐயா. நீங்கள் என்னை அவருடைய தீர்க்கதரிசி என்று, சீயோனின் தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறீர்களா? நாம் முன்பின் தெரியாதவர்களா? உங்களை எனக்கு முகமறிந்து தெரியாது. எனக்குத் தெரிந்தவரை நான் உங்களைப் பார்த்ததே இல்லை. சரி.

அப்படியானால் நான் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தால், அவர் எனக்கு வெளிப்படுத்துவார். நீங்கள்—நீங்கள்... என்னால் உங்களைக் குணமாக்க முடியாது. ஆனால் இப்போது உங்கள் வாழ்க்கையை நீங்கள் என்னிடமிருந்து மறைக்க முடியாது. ஏனென் றால் ஏதோ நடக்கிறது என்பதை நீங்கள்

அவரைக் குணமாக்கி அவரைச் சுகமாக்கும்படி நான் ஜெபிக்கிறேன். தேவனுடைய ஆவியானவர் இந்த மனிதரின் மேல் வந்து, அவரிடமிருந்து சாபத்தை, பாவத்தின் சாபத்தை, வியாதியின் சாபத்தை, காது கேளாமை என்ற சாபத்தை அகற்றி, கிறிஸ்து இயேசுவுக்குள் அவரை ஒரு புதிய சிருஷ்டியாக மாற்றுவாராக. சர்வவல்லமையுள்ள தேவனே, என் ஜெபத்தைக் கேளும். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

இப்போது, இதை இங்கேயே விட்டு விடுங்கள். என்னவென்று பாருங்கள்... இதற்காகப் பாருங்கள்... அதைப் பிடித்துக் கொள்ளுங்கள். சரி. நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா? நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா? "ஆமென்" என்று சொல்லுங்கள். நான் கர்த்தரை நேசிக்கிறேன். நீங்கள் குணமடைந்துவிட்டீர்கள், சகோதரா. உங்கள் பாவங்கள் போய்விட்டன. உங்கள் வழியில் மகிழ்ச்சியாகச் செல்லுங்கள்.

*45* "தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று சொல்வோம். நீங்கள் கர்த்தரை



கேட்கவுமில்லை." அவர் எவ்வளவு அற்புதமானவர்.

இப்போது, அன்பான கிறிஸ்தவ நண்பர்களே, தேவனின் சமாதானம் உங்கள் மீது இருப்பதாக. சீயோனில் உள்ள உங்கள் அனைவரோடும் தேவனின் மிகச் சிறந்த ஆசீர்வாதங்கள் எப்போதும் நிலைத்திருப்பதாக.

அழியாத கிறிஸ்தவ அன்போடு நான் உங்களை நேசிக்கிறேன். சீயோனைப் பற்றிய நினைவு எனக்கு இருக்கும் வரை, சீயோனுக்கும் அதன் மக்களுக்கும் என் இதயத்தில் ஒரு மென்மையான இடம் இருக்கும். கர்த்தருடைய வருகைக்கு முன்பாக தேவன் உங்களுக்கு இன்னொரு எழுப்புதலைத் தர வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிப்பேன், அவர் அதைச் செய்வார். நான் அதைப் பார்க்க விரும்புகிறேன். தேசம் முழுவதிலுமிருந்து மக்கள் மீண்டும் சீயோனில் கூடிவருவதை நான்—நான் பார்க்கும் அந்தக் காலத்தைக் காண நான் உயிரோடு இருப்பேன் என்று நம்புகிறேன். அது அற்புதமாக இருக்காது? தொடர்ந்து ஜெபி

யுங்கள், தொடர்ந்து விழித்திருங்கள். தேவன் வெளிப்படுத்துவார்.

*3* என்னால் முடிந்த அனைத்தையும் உங்களுக்காகச் செய்யும் கர்த்தருக்குள் உங்கள் ஊழியக்காரன் நான். நான் மக்களிடம் கூறுவது வழக்கம்: இரவு மிகவும் இருட்டாக இல்லை, அல்லது மழை மிகவும் கடினமாகப் பெய்யவில்லை என்றால், நான் வருவேன், ஊர்ந்து செல்வேன், எதுவாக இருந்தாலும் செய்வேன் என்று. எனக்குப் பல மில்லியன் நண்பர்கள் கிடைத்த பிறகு அதை நான் கொஞ்சம் சரிபார்க்க வேண்டியிருந்தது. ஆனாலும், அது என்னைச் சிறிதும் மேலானவனாக உணரச் செய்யவில்லை. சகோதரனே, நான் அதே போலத்தான் உணருகிறேன். சகோதரனே, சகோதரியே, நான் இதைச் செய்வேன். எந்த நேரத்திலும் நான் வந்து உங்களுக்கு ஒரு உதவி செய்ய முடியும் என்றால், தேவன் என்னைச் செய்ய அனுமதித்தால், நான் அதைச் செய்வதில் மகிழ்ச்சியடைவேன். புரிகிறதா? ஒருவேளை நான் இப்படிச் சொன்னால்... ஒருவேளை இங்கே ஒரு...



என்று, இன்றிரவு தொடங்கி உங்கள் வாழ்நாள் முழுவதும் அவருக்கு சேவை செய்வீர்கள் என்று வாக்குக்கொடுக்கிறீர்களா? இப்போது நீங்கள் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறீர்களா?

*44* ஒரு தரிசனத்தில் நீங்கள் செய்வதாக நான் கவனிக்கும் மற்றொரு காரியம் இங்கே இருக்கிறது. அது சமீபத்தியது. நிச்சயமாக ஒரு பாவியான மனிதனாக இருப்பதால், நீங்கள் அதைச் செய்கிறீர்கள். நீங்கள் சிகரெட் குடிக்கிறீர்கள். நீங்கள் அதிலிருந்து விலகி வர வேண்டும். பார்த்தீர்களா? இப்போது அதை இனிமேல் செய்யாதீர்கள். நீங்கள்—நீங்கள் இப்போது ஒரு கிறிஸ்தவராக இருக்கப் போகிறீர்கள், மேலும் தேவனோடு நடக்கப் போகிறீர்கள்.

சர்வவல்லமையுள்ள தேவனே, காதில் ஒரு கருவியுடன், காதுகேளாதவராக இங்கே நின்று கொண்டிருக்கும் இந்த மனிதரின்படி, இந்த மனிதருக்காக இரக்கத்தைக் கேட்கிறேன். அவர் இப்போது உம்மைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். அன்பான தேவனே, நீர்

உங்களைக் குணமாக்கவோ எனக்கு எந்த வழியுமே இல்லை. நான் செய்யக்கூடிய ஒரே காரியம் உங்களுக்காக ஜெபிப்பது மட்டும்தான். அது உங்களுக்குப் புரிகிறதல்லவா? மேலும் இயேசு உங்கள் இரட்சகராக உங்களுக்குத் தேவை. இப்போது, அது சரிதானே? என்னிடம் நேர்மையாக இருங்கள். அது—அது சரிதான். அது சரிதானே? நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பவில்லை. கிணற்றருகே இருந்த பெண்ணிடம், "போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டுவா" என்று சொன்ன அதே ஆவியானவர்தானா இது? உங்களுடைய மனந்திரும்பாத நிலைமையை அறிந்திருந்த, இயேசு கிறிஸ்துவா?

ஒரு போர் அல்லது இராணுவம், அல்லது அது போன்ற ஏதோ ஒரு ஈடுபாடு உங்களுக்கு இருந்ததா? நீங்கள் ஒரு போர்வீரராக இருந்தீர்களா? அது சரிதானே? என்னை அவருடைய தீர்க்கதரிசியாக நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இங்கே வாருங்கள். இப்போது இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வீர்களா? நீங்கள்—நீங்கள் அவரை விட்டுவிலக மாட்டீர்கள் என்று—அவரை விட்டுவிலக மாட்டீர்கள்



தொலைபேசியில், உதாரணமாக, சில சமயங்களில் என் தொலைபேசி ஒலிக்கத் தொடங்கும், இருபத்தி நான்கு மணி நேரத்தில், சராசரியாக அறுபத்தி நான்கு நீண்ட தூர அழைப்புகள் ஒரு தொலைபேசியில், பல மணிநேரங்களுக்கு, இரவும் பகலும் வரும். புரிகிறதா? இப்போது, அந்த அழைப்புகள் அனைத்தையும் என்னால் எப்படி எடுக்க முடியவில்லை என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். புரிகிறதா? உங்களால் அதைச் செய்திருக்க முடியாது.

ஆனால் எனக்கு அவை கிடைக்கும்போது, அவை அனைத்தும் எழுதப்பட்டிருக்கும். அவர்கள் அவற்றை எழுதுவார்கள். இந்த அழைப்புகளை எடுத்து—எழுதி வைக்கப் பெண்கள் தொலைபேசிகளில் இருக்கிறார்கள். நான் அவற்றுக்காக ஜெபிக்கிறேன், தொடர்ந்து ஜெபிக்கிறேன். பின்னர் தேவன், "நீ இங்கே ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்" என்று சொல்லும்போது, நான் அங்கே சென்று விடுகிறேன். அவர் என்ன சொல்கிறாரோ, அதை நான்—நான் செய்ய முயற்சிக்கிறேன். எல்லாவற்றையும் விட நீங்கள் அதைப்

பாராட்டுவீர்கள் என்று நான் நம்புகிறேன். பாருங்கள், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்களைப் பின்பற்றுங்கள். நான்-நான் அதைச் செய்ய விரும்புகிறேன்.

4 உங்களுக்குத் தெரியாது. இன்றிரவு, என் இதயத்தில்... நான் நம்புகிறேன்... நான் ஒரு...?.. வைக்க வேண்டும். பாருங்கள், நான் ஒரு உணர்ச்சிவசப்படக்கூடிய நபர், ஒருவித மனச்சோர்வு கொண்ட நபர். என்னை நானே விலகிச்செல்ல அனுமதிக்க முடியாது. சாத்தான் எனக்கு எதிராக அதைப் பயன்படுத்திக் கொள்கிறான். புரிகிறதா? நான் உடைந்து போகக்கூடிய வகைகளில் ஒருவன். நிச்சயமாக, இன்னும் சில நிமிடங்களில் உங்களிடம் விடைபெறுவேன். நான்-நான் அதைச் செய்வது நல்லது. ஆனால் அதை அப்படி வெளிப் படுத்தும்போது, நான் ஒருவேளை அழத் தொடங்கிவிடுவேன். புரிகிறதா?

ஆனால் நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. நான் இங்கே முன்னால் ஒன்றை வைக்க வேண்டும். இப்போது தேவனுடைய சத்தியமே முதலாவதாக நிற்கிறது.



வரைக்கும். நீங்கள் பார்க்கிறீர்களா? சரி, நான் முதலில் உங்களிடம் பேச முடியுமானால் பிறகு... இப்போது, என்ன... இயேசு கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் பற்றி, எல்லா கிரியைகளையும் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அது... அது ஆச்சரியமாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக நீங்கள் நினைக்கிறீர்கள். சரி.

இப்போது, ஒருவேளை தேவன்... ஒருவேளை... இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தால், அப்படி அவர் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம், அவர் தம்மை ஊக்கமாய்த் தேடுகிறவர்களுக்குப் பலனளிக் கிறவராக இருக்கிறார். இன்றிரவு நீங்கள் உதவி தேடி இங்கு வந்திருக்கிறீர்கள். அந்த காதுக் காகத்தான் என்பதில் சந்தேகமில்லை, அதுவாகத் தான் இருக்கிறது. அந்த காதுதான் அது. ஆம், ஐயா. உங்கள் இரண்டு காதுகளும்தான். சரி.

43 இப்போது, என்னால் உங்களைக் குணமாக்க முடியாது. அது உங்களுக்குப் புரிகிறதா? என்னால் உங்களைக் குணமாக்க முடியாது. உங்களுக்கு உதவவோ, அல்லது

பிதாவே, உம்முடைய ஆவியானவர் சமீபமா யிருக்கிறார் என்றும், நீர் அவரை ஆசீர்வதித்து, அவரைக் குணமாக்கி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவரை முழுமையாகச் சுகமாக்க வேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

இப்போது, சகோதரா, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் உங்கள் வழியில் சென்று, சுகமடையுங்கள்.

*42* “தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டா வதாக” என்று சொல்வோம். இப்போது, முதல் காரியமாக, அந்த மனிதன் தன் காதில் ஒரு கருவியை வைத்திருப்பதை நான் பார்க்கிறேன். ஆகவே அது முதல் காரியமாக எடுக்கப் படுகிறது அவர்—அவருக்கு காது கேளாமலோ, அல்லது வேறு ஏதோ இருக்கிறது. சரி. அது...

நான் பேசுவது உங்களுக்கு நன்றாகக் கேட்கிறதா? சரி. நீங்கள் அருகில் வாருங்கள். இந்த—இங்குள்ள இந்த கருவி மூலமாக நான் பேசுவதை உங்களால் கேட்க முடிகிறது. சரி இப்போது, உங்களால் கேட்க முடிகிற



என்னால் உங்களிடம் விடைபெற முடியாது, ஏனென்றால் நான் கிறிஸ்துவுக்குள் நிலைத்தி ருந்தால், நீங்களும் கிறிஸ்துவுக்குள் நிலைத் திருந்தால், எந்தப் பிரிவுகளும் இல்லாத ஒரு இடத்தில் நாம் சந்திக்கப் போகிறோம். நாம் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் நம்மை நிலை நிறுத்திக் கொண்டோம். புரிகிறதா?

நான் இங்கே ஒரு வயல்வெளிக்கு வெளியே செல்ல வேண்டியிருக்கலாம், நீங்கள் உங்கள் வயல்வெளிக்குச் செல்ல வேண்டியிருக்கலாம். ஆனால் தேவன் நம் இருவரோடும் இருந்து, நாம் மீண்டும் சந்திக்கும் வரை நம் இருவருக்கும் இடையே கண்காணிப்பாராக.

*5* இந்த அரங்கின் செலவினங்களுக்காக சில துணிச்சலான மனிதர்கள் இங்கே ஏதோ செய்தார்கள் என்று கேள்விப்படுகிறேன். என் சகோதரர்களே, உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நாங்கள் ஒருபோதும் நிதியைப் பெறுவதற்காகச் செல்வதில்லை, ஒருபோதும் இல்லை. நான் எப்போதாவது அதை என்-என் மனதில் நினைத்தால், அந்த இடத்தை விட்டு

வெளியேறவும், தேவன் என் இதயத்தை அவருடன் மீண்டும் சரிசெய்யும் வரை ஜெபிக்கவும், என்னைப் போதுமான அளவு பண்புள்ளவனாக நடந்துகொள்ள தேவன் எனக்கு உதவுவாராக. புரிகிறதா? அது அப்படி இல்லை. ஆனால் நாங்கள் இப்போது சற்று தீவிரமான தேவையில் இருக்கிறோம். அது உண்மைதான், ஏனென்றால் நான் சுமார் ஏழு மாதங்கள் ஊழியத்திலிருந்து விலகி இருந்தேன். பல நூற்றுக்கணக்கான டாலர்கள் கடனாளியாகி விட்டேன், அதை நான் சரிசெய்ய வேண்டும். ஒரு தரிசனம் என்னை அழைக்கிறது என்று எனக்குத் தெரிந்த கடல் கடந்த நாடுகளுக்கான எனது பட்ஜெட்டையும் நான் உருவாக்க வேண்டும். அது முழுமையாக உருவானவுடன், தேவன் என்னைச் செல்ல அனுமதிப்பார் என்று நான் நம்புகிறேன்.

மேலும் உங்களின் காணிக்கை, அது இன்று சென்றது... அவர்கள் ஒரு அன்புக் காணிக்கை எடுத்ததாகச் சகோதரர் பாக்ஸ்டர் சொன்னார். அதை நான் முழு மனதுடன் பாராட்டுகிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு



ஆனால் அது உங்கள் வயிறு. அது சரிதானே? அது சரிதான். உங்களுக்கு—உங்களுக்கு ஒருவித மஞ்சள் நிறம் இருக்கிறது, அது ஒரு... உங்களைப் பார்க்கும்போதே, அது ஒருவித மஞ்சள் காமாலை போல என்று நான் நினைத்தேன். ஆனால் அது அல்ல. அது உங்கள் வயிறு. அது உங்கள் வயிறு.

சொல்லப்போனால், உங்களுக்கு ஒரு அறுவை சிகிச்சையும் நடந்திருக்கிறது. அது சரிதானே? அந்த வயிற்றின் ஒரு பகுதி அகற்றப்பட்டிருக்கிறது. அது இல்லையா... ஆம், ஆம், ஐயா. அது சரிதான். அதன் காரணமாக உங்களுக்கு இன்னும் பலவீனமான நேரங்களும், அதுபோன்று மற்றவைகளும் இருக்கின்றன. அவர் உங்களைக் குணமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இங்கே வாருங்கள், ஐயா.

எங்கள் பரலோகப் பிதாவே, மருத்துவர் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தி ருக்கிறார். அவர் தலையை அசைப்பதை நான் பார்த்தேன். ஆனால் ஆண்டவரே, இந்த மனிதருக்கு உதவ நீர் சமீபமாயிருக்கிறீர்.

அப்படித்தான் தேவன் காரியங்களைச் செய்கிறார். அவர் அந்த வழியில் இருக்கிறார்.

*41* இப்போது, ஒருவேளை... நீங்கள் எனக்கு முன்பின் தெரியாதவரா? நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்களா? நீங்கள்... இந்த வாரம் நீங்கள் கூட்டத்தில் இருந்திருக்கிறீர்கள். ஆனால் எனக்கு—எனக்கு உங்களைத் தெரியாது. நான் உங்களுக்கு ஒருபோதும் அறிமுகப்படுத்தப்பட்டதில்லை அல்லது அதுபோன்று எதுவுமில்லை, உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, உங்களை நான் அறிந்துகொள்ள எந்த வழியுமே இல்லையா?

சரி. அப்படியானால் நீங்கள் தேவையிலோ, அல்லது கஷ்டத்திலோ, அல்லது அது என்னவாக இருந்தாலும் இருக்கிறீர்கள். அதன்பிறகு உங்களைக் குறித்து தேவன் எனக்கு ஏதாவது காண்பித்தால், அதை நான் தெரிந்துகொண்டால், அப்போது நீங்கள் விசுவாசிப்பீர்களா—உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிப்பீர்களா? சரி, நான் இப்போது பார்க்கிறேன்... உங்களைப் பார்க்கும்போது, நான் வேறு எதையோ கணித்திருப்பேன்.



சீக்கிரம் கர்த்தர் என்னை ஒரு-ஒரு வயல் வெளிக்கு அனுப்புவார்.

*6* ஓ, நான் எல்லா நேரங்களிலும் உங்கள் நெருப்புக்கருகில் குளிர்காய விரும்புவேன். வீட்டைச் சுற்றியே இருந்து, உங்களுடன் பேசி, உங்கள் வீடுகளுக்கு வந்து உங்களைச் சந்திக்க நான் விரும்புகிறேன். அதை நான் எப்படிச் செய்வேன் என்பது வேறு யாருக்கும் தெரியாது. தேவனுக்குத் தெரியும். நான்-நான் விரும்புகிறேன். இன்றிரவு இந்தக் கட்டடத்தில் உள்ளவர்களில், உங்கள் வீட்டிற்கு வந்து, இரவு முழுவதும் உங்களுடன் தங்கி, உங்களுடன் பேசி, நாளைக் காலையில் எழுந்து முன்பக்க வராண்டாவில் அமர்ந்து, அல்லது எங்காவது ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து உங்களுடன் கிறிஸ்துவைப் பற்றிப் பேச விரும்பாத ஒரு நபர் கூட இல்லை. ஆனால் அது முற்றிலும்... அனைவரிடமும் என்னால் அப்படிச் செய்ய முடியாது. நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா? பின்னர் என் எஜமானருக்காகவும், உங்களுக்காகவும் எனக்குத் தெரிந்த சிறந்தவனாக இருப்பதற்காக, நான் அறையில் தனியாக இருக்கிறேன். நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

"தேவனே, நான் கீழே செல்லும்போது, உமது பிரதிநிதியாக இருக்கவும், மக்களின் மத்தியில் தேவனின் அன்பைக் காட்ட எனக்குத் தெரிந்த சிறந்த விதத்தில் செயல்படவும் எனக்கு உதவும் (புரிகிறதா?), உங்களுக்கு உதவக்கூடிய ஏதாவதொன்றைச் செய்யவும்."

இப்போது, இன்றிரவு நீங்கள் அந்த அன்புக் காணிக்கையைக் கொடுத்திருந்தால், நான் உங்களுக்கு ஒரு வேத வசனத்தைத் தருகிறேன். இயேசு சொன்னார், "என் சிறியவர்களில் (அது நான்தான்) மிகவும் சிறியவனாகிய ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த என் சீஷர்களில் ஒருவனுக்கு, சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்." மேலும் கர்த்தர் உங்களுக்கு அதை நூறு மடங்காகத் திருப்பித் தருவாராக.

மிக்க நன்றி. நான் அறிவேன், இதில் ஒரு சிறிய...?.. நிபந்தனைகள் உள்ளன. திரு. பாக்ஸ்டர் அப்படிப்பட்ட மனிதர் அல்ல.



நீங்கள் உங்கள் இருதயத்தால் விசுவாசித்தால், ஒருவேளை நான்... உங்களுக்கு விசுவாசம் இருக்க நான் அப்போது உதவ முடியும். பார்த்தீர்களா? இப்போது, உங்களுக்குத் தேவையானது, விசுவாசம் மட்டுமே. விசுவாசம் எல்லாவற்றையும் செய்யும். எவரும் செய்யக் கூடியது அவ்வளவுதான். அவர்கள் வார்த்தையைப் பிரசங்கிக்கலாம். நீங்கள் அதை வார்த்தையின் மூலம் கேட்கிறீர்கள். விசுவாசம் வார்த்தையைக் கேட்பதினால் வரும். இப்போது, இது தேவனுடைய வார்த்தை. அது சரிதானே? அதுதான் முதல்; அது தேவனுடைய வார்த்தை. அது எல்லா மக்களுக்கும் உரியது.

சரி, ஒருவேளை ஒரு தனிப்பட்ட வாழ்க்கையில் அந்தச் சுகத்தையோ அல்லது வேறெதையோ அனுமதிக்காத ஏதோ ஒன்று இருக்கலாம். அப்படியானால் இரண்டாவதாக, அந்த நபர் சரியாக, சீராக்கப்பட, அல்லது அது போன்ற ஏதோ ஒன்றுக்கு உதவ தேவனுடைய வார்த்தை அப்போது—பூமிக்கு வரும். அது சரிதானே? அப்படித்தான்... அது அந்த காரியங்களுக்கான தேவனுடைய நியமனம்.

எங்கள் பரலோகப் பிதாவே, இங்கே கஷ்டப் பட்டுக்கொண்டும் தேவையிலும் இருக்கிற இந்தப் பாவம் ஒரு பெண்ணிற்காக, நீர் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் என் முழு இருதயத்தோடு கேட்கிறேன். அதை அருளிச்செய்யும், அன்புள்ள ஆண்டவரே. உமது ஆவியானவர் அவள்மேல் வந்து அவளைக் குணமாக்குவாராக. “வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்” என்று சொல்லும் பரிசுத்த வேத வாக்கியங்களின்படி நான் அவள்மேல் கைகளை வைக்கிறேன். அதை அருளிச்செய்யும், பிதாவே, இயேசுவின் நாமத்தில். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. இப்போது, சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் உங்கள் வழியில் செல்லுங்கள். உங்கள் சாட்சியை எனக்கு எழுதி அனுப்புங்கள்.

40 சரி. வாருங்கள், ஐயா. சரி, ஐயா. இங்கே இந்தக் கூட்டங்களில் நடக்கும் காரியம் தேவனால் உண்டானது என்று நீங்கள்—உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரி, அதை



உங்களிடம் சொல்ல வேண்டியதெல்லாம், "நன்றி."

7 மேலும் காவலர் என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்... (நான் தவறாக நினைக்கவில்லை என்றால், இங்கே நிற்பது இதுதான் என்று நான் நம்புகிறேன். ஒருவேளை இங்கே சிலர் இருக்கலாம்.) மேலும் பலரும், வரவேற்பாளர்களும், போதகர்களும், சாதாரண மக்களும், உங்கள் ஒவ்வொருவரும்... உங்களில் சிலர் முகாமுக்குச் சாப்பிடச் சிறிய பொருட்களை அனுப்பி வைத்தீர்கள்.

ஒரு குறிப்பிட்ட சகோதரர் இன்றிரவு இந்தக் கட்டடத்தில் அமர்ந்திருக்கிறார். சில நிமிடங்களுக்கு முன்புதான் அவரை நான் அடையாளம் கண்டுகொண்டேன். மற்றுமொரு நாள் நான் ஒரு உணவகத்தில் இருந்தபோது அவர் உள்ளே வந்தார். நான் என் கட்டணத்தைச் செலுத்தச் சென்றேன். என்னுடன் என் மனைவி, சகோதரி பாக்ஸ்டர் மற்றும் குழந்தைகள் இருந்தனர். கட்டணம் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. ஒரு மனிதர் அதைச் செய்தார். அவர் யார் என்று

நான் இங்கே சொல்லவோ, அல்லது அவரைப் பிரத்தியேகப்படுத்தவோ அவர் விரும்புவார் என்று நான் நினைக்கவில்லை. கிறிஸ்தவர்களே, நாம் அந்த காரியங்களை விரும்புவதில்லை. புரிகிறதா? இந்தக் கை செய்வது இந்தக் கைக்குத் தெரிய நாம் விடுவதில்லை.

அதனால் நான் எல்லாவற்றையும் பாராட்டு கிறேன். உங்களுக்கும் தெரியும், தேவனுக்கும் தெரியும், இந்த ஆசீர்வாதங்கள் உங்களுடன் எப்போதும் இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். போர் கடினமாகவும் கரடு முரடாகவும் நடந்துகொண்டிருக்கும்போது, இரு ளான...?.. அந்நிய தேசங்களில் வெகு தொலைவில், சாத்தான் ஒவ்வொரு பக்கத்திலும் இருக்கும்போது, சீயோனில் அவர்கள் எனக்காக ஜெபிக்கிறார்கள் என்பதை நான் நினைவில் கொள்வேன்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. எப்போதாவது ஜெபர்சன்வில்லே பக்கம் வரும்போது, உள்ளே வந்து எனக்குக் கைகொடுங்கள். நான் வீட்டில் இருக்கும்போது,



நான் சொன்ன அந்த காரியங்கள் உண்மையா? இந்த மக்கள் கூட்டமும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அது சரிதானே? எனக்கு அந்த அம்மாவைத் தெரியாது. நான் இப்போது அவரிடம் என்ன சொன்னேன் என்பது எனக்குத் தெரியாது. தேவன் சொல்வது அதுதான். தரிசனம் காண்பித்தது அதுதான். அதுதான்... தேவனுக்கு அவளைப் பற்றி எல்லாம் தெரியும். எனக்கு அவளைத் தெரியாது. ஆனால் தேவனுக்கு அவளைத் தெரியும், அவளுக்கு என்ன பிரச்சினை என்று அவர் சொல்லியிருக்கிறார்.

*39* இப்போது, அவருடைய பிரசன்னம் அவ்வளவு நெருக்கமாக இருந்தால், இந்த மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து நீங்கள் குணமடையும்படி நான் அவரிடம் கேட்டால் நீங்கள் விசுவாசிப்பீர்களா (எப்பொழுதும் என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள்.), நீங்கள் குணமடைவீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? ஆம், அம்மா. சரி, எல்லோரும் உங்கள் தலைகளைத் தாழ்த்துங்கள்.

*38* பாருங்கள், அது மீண்டும் வருவதை நான் பார்க்கிறேன். ஒரு நிமிடம். உங்களுக்கு ஒரு... உங்களுக்கு ஒரு ஸ்திரீயினுடைய பிரச்சினையும் இருக்கிறது. அது சரிதானே? அது ஒரு கசிவை ஏற்படுத்துகிறது. அது சரிதானே? பாருங்கள், அது பின்புறத்தில் இருக்கிறது. அது உண்மையா? இது ஒரு கலவையான மக்கள் கூட்டம் என்பதால் நான் அங்கு என் கையை வைக்கிறேன். அது உண்மையா?

சொல்லுங்கள், உங்கள்—உங்கள் வயிற்றின் தசைநார்களில் ஏதோ ஒரு வகையான முறுக்குதல், அல்லது இழுத்தல், அல்லது தசைப் பிடிப்பு போன்றவை உங்களுக்கு இல்லையா? அது சரிதானே? ஆம், ஐயா. ம்-ஹூம். அதற்கு எதுவும் செய்ய முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள்... ஆனால் அது—அது இன்னும் முறுக்கிக் கொண்டுதான் இருக்கும், இல்லையா? ம்-ஹூம். ஆம். ம்-ஹூம், ம்-ஹூம்...? ...பாருங்கள், அது அமைதியாகிறது (பார்த்தீர்களா?) நீங்கள் பேசுகிறீர்கள், அது என்னிடமிருந்து தரிசனத்தை உடைக்கிறது. நீங்கள் பார்க்கிறீர்களா?



எந்த நேரத்திலும் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைவேன்.

*8* சரி, சில வேத வசனங்களை வாசித்துவிட்டு நேரடியாகக் கூட்டத்திற்குள் கடந்து செல்வோம். லூக்கா எழுதின சுவிசேஷம் 2-ஆம் அதிகாரத்தில், இதை வாசிக்க விரும்புகிறேன், இங்குள்ள ஆராதனை, அழகாக எழுதப்பட்டுள்ளது. நான் அதை விரும்புகிறேன். அனைத்து வேத வசனங்களும் அழகாக எழுதப்பட்டுள்ளன. லூக்கா 2-ம் அதிகாரத்தின் 25-ம் வசனம், அது இவ்வாறு வாசிக்கிறது:

**அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.**

**கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப் பட்டுமிருந்தது.**

**அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாணமுறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டுவருகையில்,**

**அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்திரித்து:**

**ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்;...**

**உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.**

9 நாம் ஒரு நிமிடம் தலைவணங்குவோமா. நித்திய தேவனே, இன்றிரவு நாங்கள் உம்மை எவ்வளவு நேசிக்கிறோம். நான் இந்த மக்கள் முன்பாக இங்கே நிற்கும்போது, "உமது குமாரனின் இரத்தத்தின் இரண்டு துளிகளை ஒரு கண்ணாடியிலோ அல்லது ஒரு தட்டிலோ என் கையில் வைத்திருந்தால், கல்வாரியிலிருந்து வந்த நேரடியான இரத்தத் துளிகளைப் பெற்றிருந்தால் நான் என்ன செய்வேன்" என்று



இப்போது, நீங்கள் சற்று நேரம் இந்த வழியைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான்—நான் உங்கள் மனதை வாசிக்க முயற்சிக்கவில்லை. நீங்கள் என்னைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், சகோதரி, கர்த்தராகிய இயேசுவைப் பற்றி. அதைத்தான் நான் விரும்புகிறேன். ஆம், நன்றி. நன்றி.

ஆம், அவருக்குக் கட்டி இருக்கிறது. அது சரிதானே? அதுமட்டுமல்ல, உங்களுக்காக—உங்களுக்காக இதற்கு முன்பும் ஜெபிக்கப் பட்டது. அது சரிதானே? என் கூட்டங்களில் உங்கள் கட்டிகளில் ஒரு பகுதி குணமடைந்தது, ஒரு பகுதி குணமடையவில்லை. அது சரி தானே? இப்போது, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? பரலோகத்திலிருக்கும் தேவனுக்குத் தெரியும் உங்களை நான் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று, ஆனால் நான் நின்று கொண்டு, உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு தரிசனத்தை நான் காண்கிறேன். அது உண்மையா?

இப்போது, தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய நாம் நிற்கிறோம்.

37 இப்போது, நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரன், அவருடைய தீர்க்கதரிசி என்று நம்புகிறீர்களா? இப்போது, கிணற்றருகே இருந்த அந்தப் பெண்ணிடம் இயேசு பேசியதைப் போல, நான் உங்களுடன் ஒரு உரையாடலாகப் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்றிரவு நீங்கள் அதைக் கவனித்தால்... இதற்கு முன்பு நீங்கள் கூட்டங்களில் இருந்திருக்கிறீர்களா? நான் கடைசியாக இங்கே வந்திருந்தபோது, நீங்கள் கூட்டத்தில் இருந்தீர்கள். அப்படியானால், இது வெளிப்படுத்தப்படவில்லை.

பிறகு (பார்த்தீர்களா?) ஒரு இரவில், முதல் நபரிடம், ஆவியானவரின் அபிஷேகம் வரும் வரை நான் வழக்கமாக அவர்களிடம் சிறிது பேசுவேன். நீங்கள் பார்க்கிறீர்களா? அங்கு தடைகள் உடைகின்றன, தரிசனங்கள் உள்ளே வருகின்றன. நீங்கள் பார்க்கிறீர்களா? அதன்பிறகு நான்—நான்—நான் அங்கிருந்து புரிந்து கொள்கிறேன்.



அடிக்கடி யோசித்திருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை ஒரு சிறிய தட்டில் என் கைகளில் வைத்திருக்கிறேன் என்பதை அறியும்போது என் கண்ணீர் எப்படி என் கன்னங்களில் வழியும். ஆனால் இன்றிரவு, உமது பார்வையில், வேதத்தின்படி, இது மேன்மையானது என்று நான் நம்புகிறேன்; ஏனெனில் உமது இரத்தத்தின் கிரயத்தை நான் வைத்திருக்கிறேன். உமது பிள்ளைகள், உமது சொந்த ஜீவனை விட அவர்களை நீர் அதிகமாக எண்ணினீர், அவர்களுக்காக அதை நீர் கொடுத்தீர்.

இந்த மக்களுக்கு ஒரு போதகராக நான் இன்றிரவு இங்கு இருக்கிறேன். ஓ பிதாவே, நான் எத்தகைய நபராக இருக்க வேண்டும்? என்னை வார்த்து உருவாக்குங்கள், ஆண்டவரே. ஒரு பெரிய மாற்றம் அல்லது ஏதோ ஒன்று நெருக்கமாக நகர்வதை நான் உணர்கிறேன். தேவனே, அது மக்களின் நன்மைக்காகவும், தேவனின் மகிமைக்காகவும் இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இங்குச் சீயோனில் அப்படி உணரத் தொடங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன், இப்போது அது உருவெடுக்கிறது.

விரைவில் நீர் அதை வெளிப்படுத்துவீர் என்று நான் நம்புகிறேன்.

10 இப்போதும், பிதாவே, நான் தாழ்மை யுடன் உமக்காகக் காத்திருக்கிறேன். போதகர் முதல் கட்டடத்தின் துப்புரவுத் தொழிலாளி வரை இந்த மக்கள் ஒவ்வொருவருக்காகவும் நான் இன்றிரவு ஜெபிக்கிறேன். ஆண்டவரே, அவர்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கவும், எனக்குத் தெரிந்த மிகச் சிறந்ததைக் கேட்கவும் உம்மிடம் வேண்டுகிறேன். அவர்கள் நீண்ட ஆயுளுடனும், ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியு டனும், பாவம் மற்றும் நோயின்றி வாழட்டும்.

அந்தப் பெரிய தேசத்தில், ஒரு நாள் ஒரு பெரிய மேஜை அமைக்கப்பட்டிருக்கும்போது, அனைத்துக் காலங்களிலும் மீட்கப்பட்ட அனைவரும் அந்த மேஜையின் அருகே கூடிவருவார்கள். நாம் ஒருவரையொருவர் பார்ப்போம், நம் கன்னங்களில் ஆனந்தக் கண்ணீர் வழியும். நான் குறுக்கே பார்த்து, பரிசை வெல்வதற்காகப் போராடி, இரத்தக் கடல்கள் வழியே பயணம் செய்த பழைய போர்வீரர்களைப் பார்ப்பேன்; மேஜைக்குக்



யுள்ளவனாக இருந்தால், தேவன் எனக்கு உதவி செய்வார், என்னோடு இருப்பார். ஆனால் ஒருவேளை... நான் உண்மையுள்ளவனாக இல்லாவிட்டால், அவர் என்னோடு இருக்க மாட்டார். அது ஒரு காரியம் நிச்சயம்.

ஆனால் நான்—நான் மக்களுக்கு இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்த முயற்சி செய்கிறேன், நான் வெறும் ஒரு ஊழியக்காரன்—வெறும் ஒரு ஊழியக்காரன் என்று அவர்களுக்குச் சொல் கிறேன். அவ்வளவுதான்.

இன்றிரவு நான் மரித்து, அவருடைய வாசல்களுக்கு முன்பாகச் செல்ல நேர்ந்தால், அவர், "நீ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டாய்," என்று சொல்லி, இப்போது, என்னை நரகத்திற்கு அனுப்பினால், நான் நரகத்தில் இருந்தாலும், என் கைகளை உயர்த்தி, "தேவனே, நீர் நீதியும் சத்தியமுமானவர்," என்று சொல்வேன். பார்த்தீர்களா? நான் வாதையில் இருந்தாலும் அவரைத் துதிப்பேன், ஏனென்றால் அவர் உண்மையானவர். அவர் என்ன செய்தாலும், அது சரியானது. அது சரிதான்.

பரிசுத்தமாக்கினேன், ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாக உன்னை ஏற்படுத்தினேன்,'' என்று சொன்னார். பார்த்தீர்களா? இது யாரோ ஒருவர் செய்வது அல்ல; இது தேவன் செய்வது—தேவன் செய்வது. ஆமென். அது சரிதான். அது சரிதான்.

இப்போது, நீங்கள் அதைப் பார்க்கிறீர்களா? முழு சுவிசேஷ மக்களைப் பற்றித் தெரியாமல்... முதலில் நான் சந்தேகமாக இருந்தேன். என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாதபோதிலும் தேவன் என்னை அழைத்து அவர்களிடம் அனுப்பினார். அதனால்தான் நான் இப்போது இங்கு இருக்கிறேன்.

**36** நான் உங்களுக்கு உதவ முயற்சி செய்ய இங்கே இருக்கிறேன். என் நண்பர்களிடம் நான் ஒரு மாயக்காரனாக இருப்பேன் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் அதை நம்ப மாட்டீர்கள், அல்லவா? நீங்கள் நினைப்பீர்கள்... ஒரு கிறிஸ்தவ மனிதனாக, நான் குறைந்தபட்சம் உண்மையுள்ளவனாக இருப்பேன் என்று நீங்கள் நம்புகிறீர்கள், அல்லவா? நான் உண்மை



குறுக்கே நம் கைகளை நீட்டிக் கை குலுக்குவோம். கர்த்தரை நாம் எப்படித் துதிக்க முடியும். அப்போது ராஜா தமது அழகில் வெளியே வந்து நம் கண்களிலிருந்து கண்ணீரைத் துடைத்து, "இனி அழாதே. எல்லாம் முடிந்தது; நாம் இங்கே இருக்கிறோம். கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்று சொல்வார்.

இன்றிரவு இங்கே பிரசன்னமாகியிருக்கும் ஒவ்வொரு நபரும், வெள்ளுடைகளுடன் அந்தப் பெரிய திருமண விருந்தில் இருக்கவும், ராஜாதி ராஜாவுக்கும் கர்த்தாதி கர்த்தருக்கும் முடிசூட்டத் தயாராகவும் இருக்க தேவன் கிருபை செய்வாராக.

அதுவரை, ஆண்டவரே, நாங்கள் அனைவரும் எஜமானரின் வேலையில் ஈடுபட்டிருப்போம். இன்றிரவு நடக்கும் ஆராதனையையும், செய்யப்படும் அல்லது சொல்லப்படும் அனைத்தையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒப்புக்கொடுக்கிறோம், அதிலிருந்து நீர் மகிமையைப் பெறுவீராக. ஆமென்.

*11* போதகச் சகோதரர்களிடம் சொல்கிறேன், வார்த்தையைப் பிரசங்கியுங்கள்; எழுந்து செல்லுங்கள். நீங்கள் பிரசங்கிக்க வேண்டிய ஒரு நேரம் இருந்திருந்தால், அது இப்போதுதான். நகரத் தொடங்குங்கள், விரைவாக. எதுவும் உங்களைத் தடுக்க விடாதீர்கள். வெளியே செல்லுங்கள். அக்கம் பக்கத்தில் செல்லத் தொடங்குங்கள். எங்காவது செல்லத் தொடங்குங்கள்.

இங்கே நீண்ட காலத்திற்கு முன்பு நான் சொல்லிக்கொண்டிருந்தேன்... அந்தப் போருக் குப் பிறகு ரஷ்யர்கள் அங்குத் திரும்பி வந்தார்கள், ஒருவேளை அவர்கள் தங்கள் சொந்தக் கோதுமையைக் காயவைத்திருக்கலாம். அது இலையுதிர்காலத்தின் பிற்பகுதியாக இருந்தது. அது பனிப்பொழிவுக்குத் தயாராக இருந்தது. இரவும் பகலும் முழுவதும், அவர்கள் பரம்புகளை இழுக்கிறார்கள். கோதுமை கிடைக்கும் வரை—வயல் உழப்படும் வரை அவர்களால் காத்திருக்க முடியவில்லை. தங்களால் முடிந்ததை அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. இரவு நேரத்தில், இந்தச் சிறு குழந்தைகள் பெற்றோரின் முன்பாக ஒரு



இருக்கிறேன். நான் வெறும் மனிதன் தான். ஆனால் தேவன் நடத்துவார்.

*35* இப்போது, நான் ஒரு வரத்துடனே பிறந்தேன். அந்த வரங்கள் கைகளை வைப்பதன் மூலம் வருவதில்லை. அந்த வரங்கள் தேவனுடைய இறையாண்மையின் மூலம் வருகின்றன. கிருபைவரங்களும் அழைப்பும் மனமாறுதல் இல்லாதவைகளாம். அவை தேவனால் முன்குறிக்கப்பட்டவை. வரங்கள் பிறப்பிலேயே வருகின்றன.

ஏதேன் தோட்டத்தில் இயேசு கிறிஸ்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கும் ஸ்திரீயின் வித்தாக இருந்தார். மோசே ஓர் அழகுள்ள பிள்ளையாகப் பிறந்தான். யோவான் ஸ்நானகன், அவன் பிறப்பதற்கு எழுநூற்று பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பே ஏசாயாவின்படி, வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருந்தான். எரேமியா பூமிக்கு வருவதற்கு முன்பாகவே, அந்தப் பெரிய தீர்க்கதரிசியான எரேமியாவிடம் தேவன், “நீ உன் தாயின் கர்ப்பத்தில் உருவாகும் முன்பே, நான் உன்னை அறிந்தேன், உன்னை அழைத்தேன், உன்னைப்

யிடம் நான் கீழே செல்வேன். நான் அவள்மேல் கைகளை வைத்து—அவளைக் குணமாக்குவேன். நான் இங்கிருக்கும் இந்த அம்மாவிடம் செல்வேன்; நான் அவளைக் குணமாக்குவேன். காதுகளின் மேல் கைகளை வைத்துக்கொண்டு, கேட்க முயற்சி செய்து கொண்டிருக்கும் அந்தப் பாவம் ஒரு வயதான அப்பாவிடம் செல்வேன். கடந்த இரண்டு அல்லது மூன்று நாட்களும் இரவுகளும் அவர் ஏதோ ஒரு வழியைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வதை நான் பார்த்திருக்கிறேன். அவருடைய பிரச்சனை என்ன என்பதை நான் பார்த்தேன், அவருக்கு என்ன பிரச்சினை என்பது தெரியும். தேவன் இன்றிரவு அவரைக் குணமாக்குவார் என்று நான் நம்புகிறேன். என்னால் அதைச் செய்ய முடியுமானால் என்று நான் விரும்பினேன். என்னால் முடியுமானால் என்று நான் விரும்பினேன். ஆனால் என்னால் முடியாது, நான் ஒரு மனிதன். நான்—உங்கள் அன்பானவர்கள் எப்படி இருப்பார்களோ அப்படியே தான் நானும் இருக்கிறேன். நான்—நான் சகோதரர் பாக்ஸ்டரைப் போல, அல்லது இந்த... இங்குள்ள எந்த மனிதரையும் போலவே



விளக்குடன் ஓடுவதை நீங்கள் கேட்கலாம். மேலும் பெற்றோர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள், நிலத்தைச் சொறிவது போலப் பரம்புகளை இப்படி இழுப்பார்கள். உழுவதற்கு அவர்களால் காத்திருக்க முடியவில்லை; பனிப்பொழிவு மிகவும் நெருங்கிவிட்டது.

நான் பேசுவது உங்களுக்கு நன்றாகக் கேட்கிறதா? பின்பகுதியில் உள்ளவர்கள், உங்களுக்குக் கேட்டால் உங்கள் கையை உயர்த்துங்கள். சரி, அது நல்லது.

*12* அவர்களால் அதுவரை காத்திருக்க முடியவில்லை... ஒருவேளை-ஒருவேளை பனி பெய்தால், அடுத்த வருடம் அவர்கள் பட்டினியால் சாவார்கள். எந்தப் பயிரும் இருக்காது. அவர்கள் எப்படியாவது சிறிய விதையை நிலத்தில் விதைக்க வேண்டியிருந்தது. அவர்கள் நிலத்தைச் சொறிந்து விதையை வீச வேண்டியிருந்தது. அதைச் செய்வதற்கு, அவர்கள் இரவும் பகலும் இழுத்தார்கள், சாண்ட்விச்சை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு சாப்பிட்டார்கள், தொடர்ந்து பரம்புகளை இழுத்தார்கள். அவர்களால் ஒருபோதும் அதை

வேகமாக இழுக்க முடியவில்லை. அவர்கள் மனிதனை, அதாவது மனிதனே அந்தப் பரம்பை இழுக்கும்படி செய்ய வேண்டியிருந்தது.

நான் நினைத்தேன், "நிலத்தைச் சொறிகிறார்கள். அவர்கள் விதையை விதைக்கா விட்டால், எந்தப் பயிரும் இருக்கப் போவதில்லை."

மேலும் போதகச் சகோதரர்களே, தேவனின் வயலில் சொறியப்பட வேண்டிய ஒரு நேரம் எப்போதாவது இருந்திருந்தால்... ஒரு அறுவடை இருக்கப் போகிறது என்றால், இப்போதே விதையை விதைப்போம். அவள் விதைக்கிறாள். நான் எதைப் பற்றிப் பேசுகிறேன் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். அது நெருங்கி வருகிறது. செல்லத் தொடங்குங்கள், கிறிஸ்தவர்களே, எல்லா இடங்களிலும். உங்கள் பிரிவினைத் தடைகளைக் கவனிக்காதீர்கள். வெளியே சென்று தேவனுக்காக ஏதாவது செய்யுங்கள். நாளை ஒரு பயிர் இருக்கும்படி விதையை நிலத்தில் விதைப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.



அவர் இன்றிரவு வந்தார். [ஒலிநாடாவில் காலியிடம்]

சரி, எல்லோரும் கவனியுங்கள். சரி, பால், நீங்கள் தயாரா? சரி, அந்த அம்மாவைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

என் இருதயத்தின் அந்தப் பாடல், உங்களுக்குப் பரவசத்தை அளிக்கவில்லையா?

*ஓ நான் அவரை எப்படி நேசிக்கிறேன், நான் அவரை எப்படி ஆராதிக்கிறேன்.*

சரி. இப்போது, நீங்கள் தான் நோயாளி, அந்த அம்மாவா? இப்போது, அம்மா, உங்களுக்காக ஏதாவது செய்யவோ அல்லது வேறெதுவுமோ செய்வதற்கு ஏதாவது ஒரு வழி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்னால் முடியாது. உங்களைக் குணமாக்கக் கூடிய ஏதாவது என் கைகளிலோ அல்லது என் உடலிலோ இருந்திருந்தால், நீங்கள் இந்த மேடையிலிருந்து சுகமாகச் செல்வீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நான் அதைச் செய்வேன். அதுமட்டுமல்ல, ஆனால் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் அந்தச் சிறுமி

தரிசனங்களோடு வெளிப்படுவீராக, ஆண்டவரே. இந்த மக்களிடம் பேசுங்கள்; அவர்களுக்கு அடையாளங்களையும் அற்புதங்களையும் காண் பியும். நீர் என்ன செய்வீர் என்று எனக்குத் தெரியாது. அது உமக்குத் தெரியும், ஆண்டவரே. ஆனால் நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். மேலும் ஜெபம் காரியங்களை மாற்றும் என்று நான் ஜெபிக்கிறேன். இன்றிரவு இந்த மக்கள் கூட்டத்தின் மீது ஒரு விசேஷித்த ஆசீர்வா தத்தைக் கேட்கிறேன். அதை அருளிச்செய்யும், ஆண்டவரே. மனத்தாழ்மையுடன், உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதைக் கேட்கிறேன். ஆமென்.

*34* சரி. அவர் எனக்குப் பின்னால் நிழலில் அமர்ந்திருக்கிறார். நான் அவரைப் பார்க்கவே இல்லை, என்—என் மகன். என்ன... எண்ணா...? ...சரி. ஜெப வரிசையில் இருந்து சிலரை அழைப்பதன் மூலம் இன்றிரவு நமது ஜெப வரிசையை ஆரம்பிப்போம். பில்லி இன்றிரவு கீழே வந்து ஜெப அட்டைகளை கொடுக்க வேண்டியதிருந்தது. இன்று மதியம் அவற்றை கொடுக்க முடியவில்லை, அதனால்



*13* இப்போது, இன்றிரவு வாசிக்கப்பட்ட வேதப் பகுதியில், இயேசு ஒரு குழந்தையாகத் தோன்றுவதற்குச் சற்று முன்பு-சற்று முன்பாக இருந்தது. சிமியோன் என்ற பெயருள்ள ஒரு முதியவர் இருந்தார், ஒரு வயதான முனிவர். அநேகமாக... டாக்டர் டோவியைப் போல நீண்ட, வெண்மையான, அலைபாயும் தாடி யுடன் அவர் இருந்திருப்பார் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இஸ்ரவேலில் ஒரு போதகராக அவருக்கு ஒரு சிறந்த பெயர் இருந்தது, ஒரு அற்புதமான பழைய சபைப் பிதா.

உங்களுக்குத் தெரியும், ஒரு நாள் பரிசுத்த ஆவியானவர் அவரிடம் பேசினார், கர்த்தருடைய கிறிஸ்துவைக் காணும் வரை அவர் மரிக்கப் போவதில்லை என்று சொன்னார். அவர் அதை நம்பினார்.

இப்போது, அவர்கள் கிறிஸ்து வருவார் என்று பல ஆண்டுகளாகக் காத்திருந்தார்கள். இதோ அவர்கள் சிறையிருப்பில் இருந்தார்கள். மேலும் என் தேவனே, அப்போது கிறிஸ்து எப்படி வர முடியும்?

ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவருக்கு வாக்குறுதி அளித்தார். எனவே அவர் சுற்றித் திரிந்து, "இப்போது-இப்போது, கிறிஸ்துவைக் காணும் வரை நான்-நான் மரிக்க மாட்டேன்" என்று சொல்ல அவர் பயப்படவில்லை.

14 அவர்களில் சிலர் இப்படிச் சொல்வதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது, "சொல்லுங்கள், இந்த முதியவர் கொஞ்சம் வயதாகிவிட்டார், உங்களுக்குத் தெரியும். அவரது மனதில் ஏதோ தவறு இருக்கிறது. அவர் கிறிஸ்துவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டே சுற்றுகிறார். நினைத்துப் பாருங்கள், அப்படிப்பட்ட ஒரு முதியவர், இப்போது கிட்டத்தட்ட நூறு வயதாகிறது, தான் கிறிஸ்துவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு இங்கே சுற்றித் திரிகிறார். மேலும் பெரிய மனிதர்கள் அவருக்காக பல ஆண்டுகளாகக் காத்திருந்தனர். அதைப் பற்றிச் சற்று யோசியுங்கள்."

ஆனால் அவர்... பரிசுத்த ஆவியானவர் அப்படிச் சொன்னார். அதுதான் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அவர் தன் மனதில் பித்துப்



பெயர்களோடு இருப்பதைக் காண்கிறேன். நான் மீண்டும் இந்த நகரத்திற்கு வந்திருக்கிறேன். அங்குள்ள சிறிய கிரேஸ் மிஷன் சபையை நான் நடத்தின அந்த இரவை நான் நினைவு கூருகிறேன், “நான் திரும்பி வருவேன்,” என்று நான் சொன்னேன். அதை மீண்டும் செய்வதற்கான பாக்கியத்தை நீர் எனக்கு அளித்திருக்கிறீர். ஆண்டவரே, கூட்டங்கள் அவர்கள் இப்போது உணருவதைவிட மேலான ஒரு ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அது இந்த நகரத்திலேயே, இயேசு வரும் வரை முடிவடையாத ஒன்றைத் தொடங்குவதாக. இந்த நகரத்திலேயே, நமக்குத் தேவையான ஒரு எழுப்புதலாக, இங்கிருக்கும் மக்கள் மத்தியில் எங்கேயாவது ஒரு இடத்தில் அது வெடித்துப் புறப்படுவதாக. அதை அருளிச்செய்யும், ஆண்டவரே.

இப்போது இன்றிரவு, நாங்கள் நிறைவு செய்யும்போது, உம்முடைய தாழ்மையான ஊழியனிடம் நீர் வருவீர்களா. ஆண்டவரே, இன்றிரவு என்னை ஒரு வல்லமையான விதத்தில் ஆசீர்வதிப்பீரா. உம்முடைய தூதனை மட்டும் கீழே அனுப்பும். பெரிய

நீங்கள் அவைகளைச் செய்தால், அவர் அவைகளைச் செய்வார். "நான் செய்கிற கிரியைகளை அவனும் செய்வான்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் இவைகளை விடப் பெரிதானவைகளையும் செய்வான்." பெரிதானதாக இருப்பது என்பது உங்களில் அதிகமாக இருப்பதும்... அதில் அதிகமாக இருப்பதும் ஆகும். ஓ, ஆச்சரியம். அவர் அற்புதமானவர் அல்லவா? இப்போது, நாம் ஜெபிக்கும்போது இன்றிரவு அவரை விசுவாசியுங்கள்.

*33* சர்வவல்லமையுள்ள தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நித்திய ஜீவனின் காரணரே, ஒவ்வொரு நல்ஈவையும் அளிக்கிறவரே, இல்லினாய்ஸ் மாநிலத்திலுள்ள சீயோன் நகரத்தில் இன்று இரவு எங்களுடைய நிறைவுக் கூட்டமாக இருக்கிறது.

தேவனே, என்னுடைய அந்த மேசை அறையில் இப்போது ஒரு சிறிய காகிதம், ஒரு சிறிய நீல நிற அட்டை, அதில் பல பக்கங்களில் மனிதர்களின் பெயர்கள், இந்த சீயோன் நகரத்தின் வணிக நிறுவனங்களின்



பிடித்திருக்கவில்லை. அவர் பரிசுத்த ஆவியானவரைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இப்போது, இரண்டு பரிசுத்த ஆவிகள் இல்லை. ஒரே ஒரு பரிசுத்த ஆவியானவர்தான் இருக்கிறார். அது சரியா? மேலும் அன்றிருந்த அதே பரிசுத்த ஆவியானவர்தான் இன்றும் இருக்கிறார். இயேசு பெத்லகேமில் பிறந்தார்.

சில சாஸ்திரிகள், ஜோதிடர்கள் வந்தார்கள், மற்றும் நட்சத்திரங்களைப் பார்ப்பவர்கள். ஒவ்வொரு ஆய்வகத்தையும் கடந்து சென்ற அந்த நட்சத்திரத்தை அவர்கள் பார்த்தார்கள். யாருமே—அதைப் பார்க்கவில்லை. சாஸ்திரிகள் அதைப் பார்த்தார்கள். ஏன்? அவர்கள் அதற்காகக் காத்திருந்தார்கள்: யாக்கோபின் நட்சத்திரம். அவர்களின் தீர்க்கதரிசியான பிலேயாமின் கூற்றுப்படி, அவர் சொன்னார், "யாக்கோபிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிக்கும்." அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது நட்சத்திரங்களைப் பார்ப்பவர்களைக் கடந்து சென்றது, அவர்கள் அதைப் பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் அந்த நட்சத்திரத்தைப் பின்பற்றினார்கள்.

அவர்கள் ஒரு நட்சத்திரத்தைப் பார்த்தார்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஆய்வகங்கள் அதைப் பார்க்கவில்லை, ஆனால் சாஸ்திரிகள் அதைப் பார்த்தார்கள்.

15 நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ அதைத் தான் பெறுவீர்கள். இன்றிரவு நீங்கள் சுகமடைய வேண்டும் என்று எதிர்பார்த்தால், நீங்கள் சுகமடைவீர்கள். நீங்கள் அதை எதிர்பார்க்க வில்லை என்றால், நீங்கள் வழக்கமாக... இன்றிரவு நீங்கள் கூட்டத்திற்கு வந்து, "சரி, என்ன நடக்கிறது என்று பார்க்கிறேன்" என்று சொன்னால், அதைத்தான் நீங்கள் பார்ப்பீர்கள். நீங்கள், "நான்-நான்-நான் அது சரியல்ல என்று அறிவேன்" என்று சொன்னால், பிசாசு சரியில்லாத ஒன்றை உங்களுக்குக் காண்பிக்கும்.

நீங்கள், "ஆண்டவரே, நான் உம்மை விசுவாசிக்கிறேன். என் இதயத்தில் ஒரு ஆசீர்வாதம் வேண்டும்" என்று சொன்னால், அதை நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களோ, அதைத்தான் பெறுவீர்கள். எப்போதும் எதிர்பார்த்திருங்கள். புரிகிறதா?



வல்லமையோடும், பரிசுத்த ஆவியின் விளக்கத்தோடும் வந்தது.'' ஆம், ஐயா.

அவர், ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்,'' என்று சொன்னபோது, அவர், ''உலகமெங்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப் படுத்துங்கள்,'' என்றும் சொன்னார். ஆம், ஐயா.

அது ஒருபோதும் வார்த்தையின் மூலமாக மட்டும் நம்மிடம் வரவில்லை. வார்த்தையானது பரிசுத்த ஆவியின் வல்லமையின் வெளிப் பாட்டினால் உயிர்ப்பிக்கப்பட்டு ஜீவனுள்ள தாக்கப்பட வேண்டும். நான் சொன்னேன், ''அப்படியானால் அதை நீங்கள் பெரிதான காரியங்கள் என்று அழைத்தால், நிச்சயமாக நீங்கள் சிறிய காரியங்களையும் செய்ய முடியுமே. போய் வியாதியஸ்தர்களைக் குண மாக்குங்கள். வியாதியஸ்தர்களுக்காக ஜெபி யுங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள். அந்த மாதிரியான வேலைகளைச் செய்யுங்கள்.''

இயேசு சொன்னார், ''நான் செய்கிறவை களை நீங்களும் செய்வீர்கள்.''

இந்த நபர் சொன்னார், “சரி, இங்கே பாருங்கள்.” அவர் சொன்னார், “பெரிதான காரியங்கள்... இயேசு உலகெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியவில்லை.” மேலும் சொன்னார், “உலகெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் நாம் பெரிதான காரியங்களைச் செய்திருக்கிறோம்.”

நான் கேட்டேன், “சுவிசேஷம் என்றால் என்ன?”

அவர் சொன்னார், “ஓ, அது வந்து—அது வந்து—வார்த்தை.”

நான் சொன்னேன், “முழுமையாக இல்லை, என் சகோதரா.” நான் சொன்னேன், “அது வேதவசனம் இல்லை.”

“ஓ,” என்று அவர் சொல்கிறார், “சரி, போதகர் பிரன்ஹாம்...”

நான் சொன்னேன், “ஓ, இல்லை.”

பவுல் சொன்னார், “எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல,



அவர் செய்ய வேண்டும் என்று நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களோ, எதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ, அதைத் தான் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

இப்போது, மேய்ப்பர்கள் கீழே வந்தபோது, தேவதூதர்கள் வெளியே சென்றதை என்னால் பார்க்க முடிகிறது... இப்போது குருமார்களிடமல்ல, காய்பாவிடம் அல்ல, அன்றிருந்த பிரதான ஆசாரியனிடம் அல்ல. ஆனால் மேய்ப்பர்கள் மற்றும் அதுபோன்றவர்களிடம். "இன்று, பெத்லகேம் ஊரிலே, இரட்சகராகிய கிறிஸ்து பிறந்திருக்கிறார்."

*16* மேலும் இந்த மேய்ப்பர்கள் கீழே வந்து அவரை ஆராதித்தார்கள். இன்று நம்மிடம் இருப்பது போல வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலமாக செய்தியை அனுப்ப அவர்களுக்கு எந்த வழியும் இருக்கவில்லை. எனவே செய்தி பரவவில்லை. எட்டு நாட்களுக்குப் பிறகு, அந்தத் தாய் வந்து பலி செலுத்த வேண்டியிருந்தது, ஒரு ஐசுவரியமுள்ள பெண்ணாக இருந்தால் அது ஒரு ஆட்டுக் குட்டியாக இருக்கும். ஆனால் ஒரு ஏழைப்

பெண் கானுறாக்களைச் செலுத்தினாள். எனவே அது ஒரு விவசாயியின் காணிக்கையைப் போல இருந்தது. ஆனால் அது அவளுடைய சுத்திகரிப் புக்காகவும், குழந்தையின் விருத்தசேதனத் திற்காகவும், இன்ன பிற காரியங்களுக்காகவும் இருந்தது.

எனவே நாம் இப்போது மனதளவில் ஒரு சிறிய பயணம் செல்வோம், ஒரு தரிசனத்தைப் போல, நாம் இப்போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் செல்வோம் (சரியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால்), எருசலேமிலும் பாலஸ்தீனத்தைச் சுற்றிலும் இருந்த நிலைமைகளைப் பார்ப்போம்.

அவர்கள் சிதறடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்தார்கள், மற்றும்... ஆனால் ஒரு முதியவர், "நான் கிறிஸ்துவைக் காண்பேன் என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறினார்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார்.

இப்போது, இன்று காலை அவர் கட்டிடத்தின் பின்னால் ஒரு சிறிய ஜெப அறையில் அமர்ந்து, ஒருவேளை வேத



களையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்.” பார்த்தீர்களா?

***32*** இப்போது, அது சரிதான். அதனால்தான் அன்று பெதஸ்தாவில் இருந்த எல்லா முடவர்களையும்—முடவர்கள், சூம்பிய உறுப்பு டையவர்கள் மற்றும் பலரையும் அவரால் குணமாக்க முடியவில்லை. முப்பத்தெட்டு வருடங்களாக நீரிழிவு நோயோ அல்லது வேறெதுவோ ஒரு வியாதியால் பாதிக்கப் பட்டிருந்த ஒரு மனிதனை பிதா அவருக்குக் காண்பித்தார். அவர், “உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போ” என்றார். அவனும் அப்படியே செய்தான்.

மற்றவர்களை அவர் ஏன் குணமாக் கவில்லை? அவர் சொன்னார், “பிதா எனக்குச் செய்யக் காண்பிக்கும் வரை என்னால் முடியாது.”

இப்போது, அவர் நேற்றும் இன்றும் அதேபோலவே இருந்தால், இன்றும் அவர் அதே காரியத்தைச் செய்ய முடியும்.

ஒன்றும் செய்ய முடியாது. பிறகு நான் போய் அதைச் செய்கிறேன்.''

அவர்கள் சொன்னார்கள், "அவர் ஏன் இதைச் செய்யவில்லை, அவர் ஏன் அதைச் செய்யவில்லை? சிலுவையிலிருந்து அவர் ஏன் கீழே இறங்கி வரக்கூடாது. அவர் கண்கள் கட்டப்பட்டிருக்கிறார். நாங்கள் அவர் தலையில் அடித்தோம். நீங்கள் யார் என்று எங்களுக்குச் சொல்லுங்கள், அப்போது நீங்கள் ஒரு தீர்க்கதரிசி என்று நாங்கள் நம்புவோம்?''

அவர் மக்களுக்காகக் கோமாளித்தனம் செய்யவில்லை. அவர், "பிதா எனக்குச் செய்யச் சொல்வதையும், செய்யக் காண்பிப்பதையும் நான் செய்கிறேன்,'' என்று சொன்னார். யோவான் *5:19* சொல்கிறது, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன் றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அப்படியே செய்கிறார்; பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவை



வசனங்களை படித்துக்கொண்டிருப்பதை என் னால் பார்க்க முடிகிறது. இது—இது திங்கட்கிழமை காலை என்று வைத்துக் கொள்வோம். அந்த நேரத்தில் பாலஸ்தீனத்தில் சுமார் இரண்டு அல்லது மூன்று மில்லியன் யூதர்கள் இருந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். ஒரு நாளில் அங்கே அநேக குழந்தைகள் பிறந்திருக்கலாம். ஒவ்வொரு நாளும் ஒருவேளை ஐம்பது, அறுபது, எழுபத்தைந்து, அல்லது நூறு, அல்லது இரண்டு அல்லது முந்நூறு கூட இருக்கலாம்.

*17* இருப்பினும், எட்டு நாட்கள், அவர்களுக்கு... எட்டாவது நாள், அதாவது ஒவ்வொரு நாளும் ஒரு—ஒரு விருத்தசேதன வரிசையாக இருக்கும். இன்று காலை, அனைவரும் தத்தம் வேலைகளில் மும்முரமாக இருந்தார்கள்.

பின்னால் திரும்பிப் பாருங்கள், இங்கே நூறு பெண்கள் அந்த வரிசையில் ஒன்றாக நிற்பதைப் பாருங்கள். அவர்களில் சிலர் ஒரு சிறிய ஆட்டுக்குட்டியைக் கயிற்றில் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள், நேர்த்தியான மெல்லிய

துணியால் சுற்றப்பட்ட தங்களின் சிறிய குழந்தையுடன் காத்திருக்கிறார்கள், மற்றும் பல. மற்றும்—மற்றும் மற்ற யூத தாய்மார்கள் அதை கவனித்துக்கொண்டு, உங்களுக்குத் தெரியும், அவர்கள் எவ்வளவு சந்தோஷமாக இருக்கி றார்கள் என்று.

அந்த வரிசையில் வருவோம். நான் திருமதி... அங்கே நிற்கிறார் பாருங்கள், அவர், தனது குழந்தையை அவர் எப்படி வைத்திருக்கிறார். மேலும் அனைத்தும்... அவள் உயர் குடியைச் சேர்ந்தவள், உங்களுக்குத் தெரியும். மேலும் ஆஹா, அது எவ்வளவு அழகான குழந்தை, அந்தக் குழந்தைக்கு ஏற்ற ஆடைகள், மற்றும் பலவற்றை வைத்தி ருக்கிறார்கள். மேலும் கீழே வாருங்கள்...

ஆனால் சற்று கீழே தள்ளி நின்றால், பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி, தன் முகத்தில் முக்காடு அணிந்து, ஒரு குழந்தையை முன்னணைக் துணிகளால் (swaddling's cloth) சுற்றப்பட்ட நிலையில் வைத்திருப்பதைக் காண்கிறேன்.



பட்டிருக்கிறது. அல்லது உண்மையில் அந்த வார்த்தை—அங்கு சரியான வார்த்தை என்னவென்றால், "இவைகளைவிட அதிகமாக (இன்னும் அதிகமாக இருக்கும்) நீங்கள் செய்வீர்கள்..." என்பதாகும்.

சற்று காலத்திற்கு முன்பு இங்கே ஒரு நபர் சொல்லக் கேட்டேன், "ஆம், பெரிதானவைகள், சகோதரர் பிரன்ஹாம். அவர், 'இவைகளைவிடப் பெரிதானவைகள்' என்று சொன்னார். அதுதான் அவர் சொன்னது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு அப்படித்தான் சொல்கிறது," என்றார்.

நான் சொன்னேன், "சரி. பெரிதானவைகள்." நான் கேட்டேன், "எது பெரிதானது? அவர் இயற்கையை நிறுத்தினார். மரித்தோரை எழுப் பினார். வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார். பிதா அவருக்குச் செய்யக் காண்பித்தபடியே, குருடர்களின் கண்களைத் திறந்தார். பிதா அவருக்குச் செய்யக் காண்பிக்கும் வரை அவர் எதையும் செய்யவில்லை." அது சரிதானே?

அதைத்தான் அவர் சொன்னார். "பிதா முதலில் எனக்குக் காண்பித்தாலொழிய என்னால்

பார்க்கிறீர்கள். இவர் புற்றுநோயால் இறந்து கொண்டிருந்தார்: குணமடைந்தார். இங்கே இருந்தவர் முடவன்: நடக்கிறான். இவர் குருடர்: பார்க்கிறார்.

சரி, நீங்கள் அதை நம்புகிறீர்கள். நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். உங்களிடம் ஏதேனும்—ஏதேனும் கிறிஸ்தவம் இருந்தால், நீங்கள் அதை நம்புவீர்கள். உங்களுக்குள் ஒரு சிறு அளவு தேவன் இருந்தாலும், நீங்கள் அதை அறிவீர்கள்.

அவர்—அவர் சர்வவல்லமையுள்ள தேவனாக இருந்தால், அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியாவிட்டால், அவர் சர்வவல்லமையுள்ள தேவன் அல்ல. அவர் சர்வவல்லமையுள்ள தேவனாக இருந்தால், அவர்... இயேசு கிறிஸ்து அவருடைய குமாரன், நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் மாறாதவர். நான் அதை நம்புகிறேன். நீங்களா?

31 மேலும், "நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர்கள். இவைகளைவிடப் பெரிதானவைகளையும்..." என்று எழுதப்



நான் சரியாகப் புரிந்து கொண்டால், உழும் போது உராய்வதைத் தவிர்ப்பதற்காக, ஒரு காளையின் நுகத்தடியிலிருந்து கழற்றப்படும் துணி அது, உங்களுக்குத் தெரியும்.

18 அவர்களுக்குச் சத்திரத்திலே இடமில்லாதிருந்தபடியினால், அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, அவரைத் துணிகளில் சுற்றினாள். நுகத்தடியிலிருந்த அந்தத் துணிகளை எடுத்து அவருடைய உடலைச் சுற்றிக் கட்டினாள்.

அதை அவள் தன் கையில் வைத்திருக்கிறாள். ஒரு சிறிய ஆட்டுக்குட்டி அல்ல, பிரதான ஆசாரியருக்காக அல்லது பலிக்காக அழகாக கழுவப்பட்டு நேர்த்தியாகத் தயார் செய்யப்பட்ட அழகான ஆட்டுக்குட்டி அல்ல, ஆனால் வறுமையான, ஒரு சிறிய கானுறாவைத் தன் கையில் வைத்திருக்கிறாள். ஒரு விவசாயியின் காணிக்கை.

அவர்கள் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, "அங்கே நிற்பது யார் தெரியுமா? அவள்... பரிசுத்த திருமணத்திற்கு வெளியே குழந்தை பெற்ற பெண். அவளருகில் நிற்காதே.

தள்ளி நில்." தங்கள் வாயை மூடிக்கொண்டு, உங்களுக்குத் தெரியும். "தள்ளி நில். அவள் இருக்கும் இடத்தில் நிற்காதே. அவள்-அவள் ஒரு சிறுமி. அவள் ஒரு வேசி."

ஆனால் சிறிய மரியாள் தான் யார் என்பதைத் தன் இருதயத்தில் அறிந்திருந்தாள்.

நீங்கள் சொல்லலாம், "அந்த வெறித் தனத்தைப் பாருங்கள். அதைப் பாருங்கள்-அதை..." ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதை அவர்கள் தங்கள் இருதயத்தில் அறிவார்கள்.

*19* சரி. பிறகு அவள் அங்கே நின்று, தன் குழந்தையைப் பார்ப்பதை நான் காண்கிறேன். அவள் அதைத் தன் இருதயத்தில் எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் அங்கே நின்று, தன் சிறு குழந்தையைப் பார்த்துக்கொண்டு, புறா வைப் பிடித்துக்கொண்டு, சுத்திகரிப்புக்காகக் காத்திருக்கும்போது... அது... ஒரு புறா கொல்லப்படும், மேலும் பல. அவர்கள் இருவருக்கும்...?... பிறகு அவள் புறாவைப் பிடித்துக்கொண்டிருக்கிறாள், அவர்களைப் பற்றி



எப்போதையும் விட ஆரோக்கியமாக இருக் கிறேன். ஏன்? எழுதியிருக்கிறதே. தேவன் அப்படிச் சொல்கிறார்; அது உண்மை. அது காரியத்தை முடிவு செய்கிறது. அவர் அப்படிச் சொன்னால், நான் அதை நம்புகிறேன்.

*30* இயேசு, "நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவை களைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்றார். நான் அதை நம்புகிறேன். பழங்காலத்தில் சிமியோன் இருந்ததைப் போல, இன்று இரவு நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் இங்கு வழி நடத்தப்பட்டால், உங்கள் இருதயத்தில் ஏதோ ஒரு இழுப்பு இருந்து, அப்படி ஒன்று இருக்கிறது என்று உங்களை நம்ப வைக்காவிட்டால், இந்தக் கூட்டங்களைக் காண நீங்கள் இங்கு வந்திருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் அதை ஒவ்வொரு இரவும் பார்க்கிறீர்கள், பத்திரிகைகளில் பார்க்கிறீர்கள், இங்கும் அங்கும் சாட்சி சொல்வதைப்

"சரி, நீங்கள் அதிலிருந்து வெளியே வர முடியாது, ரெவரெண்ட் பிரான்ஹாம்..." என்று சொன்னார்கள்.

நான் சொன்னேன், "எழுதியிருக்கிறதே. 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப் பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்.'" நான் அதை நம்புகிறேன்.

சாத்தான் சொன்னான், "நீ குணமடை யப்போவதில்லை."

நான் சொன்னேன், "இப்போது, இங்கே பார் நண்பா, நான் சாட்சி சொல்லி தேவனை மகிமைப்படுத்துவதை நீ கேட்க விரும்பினால், இங்கேயே இரு." நான் சொன்னேன், "ஆனால் நான் எவ்வளவு சத்தமாகக் கத்த முடியுமோ அவ்வளவு சத்தமாக இரவும் பகலும் அவருக்குத் துதிகளைச் செலுத்தப் போகிறேன்." அவனும் அங்கிருந்து விலகிப்போனான், நான் சொல்வது புரிகிறதா. இப்போது, என் வாழ்க்கையில் நான் எப்போதையும் விட அதிக எடையுடன் இருக்கிறேன். நான் என் வாழ்க்கையில்



எந்தக் கவனமும் செலுத்தவில்லை. அவள் தன் வேலையில் கவனமாக இருக்கிறாள்.

ஆனால் அந்த நேரத்தில், கட்டிடத்தின் பின்பகுதியில், ஆயிரக்கணக்கான யூதர்களால் நிரம்பியிருந்தது, எக்காளங்கள் முழங்கிக் கொண்டிருந்தன, பலிகள் செலுத்தப்பட்டன, ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன, ஜூபிலி நடந்துகொண்டிருந்தது, மற்றும் பல. ஆனால் வெகு பின்னால் ஒரு ஜெப அறையில், பரிசுத்த ஆவியானவரால் வாக்குத்தத்தத்தைப் பெற்ற ஒரு முதியவர் அங்கே அமர்ந்திருப்பதை நான் காண்கிறேன். அவர் அங்கே ஏசாயாவில், அல்லது வேறு எங்கோ உள்ள பழைய சுருளைப் படித்துக்கொண்டிருக்கிறார். "நாமெல் லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து... கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

*20* அந்த நேரத்தில், பரிசுத்த ஆவியானவர் வந்து, "சிமியோனே, எழுந்திரு" என்று சொல்வதை என்னால் பார்க்க முடிந்தது. சிமியோன் சுருளைச் சுருட்டி, அதை... கீழே வைத்தார். எழுந்து நின்றார். பரிசுத்த

ஆவியானவர் அவர் மேலிருக்கிறார். மனிதர்கள் ஆவியானவரால் நடத்தப்படுகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நான் நம்புகிறேன். அவர்கள் இன்னும் அப்படியே இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இதோ அவர் வெளியே வருகிறார். "என்ன விஷயம், ஆண்டவரே?"

"நான் இன்று காலை உனக்கு ஒன்று சொல்ல வேண்டும், சிமியோன். நான் உனக்கு ஒரு வாக்குத்தத்தம் அளித்தேன். வெளியே வா."

"நான் எங்கே போகிறேன் என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் போகிறேன்."

அன்றைய தினத்திற்குள். இதோ அவர் கூட்டத்தின் வழியாக வருகிறார், கூட்டத்தின் ஊடே தள்ளாடிக்கொண்டு, இதன் வழியாக நகர்கிறார்.

அவர்களில் சிலர் சொல்கிறார்கள், "கிறிஸ்துவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லும் மூளை குழம்பிய அந்த முதியவர் இதோ போகிறார்." அவர் அந்தக் கட்டிடத்திலேயே



ருக்கிறதே" என்றார். அது சரியா? எனவே தேவனுடைய வார்த்தையினால் சாத்தானைத் தோற்கடிக்க முடியும் என்பதை இயேசு உங்களுக்குக் காட்டினார். சபைக்கு ஒரு வரம் இருந்ததில்லை என்றால், தேவனுடைய வார்த்தை இன்று இரவு சாத்தானைத் தோற்கடிக்கும். நான் சொல்வது புரிகிறதா? இது சத்தியம் என்று எத்தனை பேர் நம்புகிறீர்கள்? தேவனுடைய வார்த்தை.

*29* நீங்கள் அதைப் பார்த்து, நம்பி, ஏற்றுக்கொள்வீர்கள் என்றால். நாளை சாத்தான், "பார், நீ இன்னும் நோயுடன் இருக்கிறாய். நீ இன்னும் மிகவும் மோசமாக நோயுற்றிருப்பதாகத் தெரிகிறது" என்று சொல்லும்போது.

"எழுதியிருக்கிறதே. எழுதியிருக்கிறதே."

மாயோஸில், நான் குணமடைய முடியாது என்று அவர்கள் என்னிடம் சொன்னபோது... என் கதை முடிந்தது என்று சொன்னபோது, நான் சொன்னேன், "எழுதியிருக்கிறதே."

வெளிப்படுவதற்காக. அவர் சாத்தானைச் சந்தித்தபோது, அவர் அவற்றில் எதையும் பயன்படுத்தவில்லை. மிக பலவீனமான கிறிஸ்தவர்களும்... என்பதைக் காட்டுவதற்காக அவர் அதைக் கீழே கொண்டு வந்தார்.

சாத்தான் உள்ளே வந்து, "இருந்தால்..." என்று சொல்கிறான். அந்தக் கேள்விக்குறி எப்போதும் வார்த்தையின் குறுக்கே இருக்கும். அவர் பசியாயிருந்தபோது, "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங் களாகும்படி சொல்லும்."

இயேசு சொன்னார்... அவர் ஒருபோதும், "இப்போது, இங்கே. நான் தேவனுடைய குமாரன். உன்னைக் கண்டிக்கிறேன்" என்று சொல்லவில்லை. அவர் அதை ஒருபோதும் சொல்லவில்லை. இயேசு சொன்னார், "மனுஷன் அப்பத்தினால்மாத்திரமல்ல (பிதாவின் வார் த்தை), என்று எழுதியிருக்கிறதே."

தேவாலயத்தின் உப்பரிகையின் மேல் அவ ரைக் கொண்டுசென்றபோது, இயேசு, "எழுதியி ருக்கிறதே" என்றார். அவரை மலையின்மேல் கொண்டுசென்றபோது, இயேசு, "எழுதியி



நின்றார், ஆனால் அவர்களுக்கு அது தெரியவில்லை. இதோ பரிசுத்த ஆவியானவர் அவரை வழிநடத்துகிறார். சுத்திகரிப்புக்காக நிற்கும் பெண்களின் வரிசைக்கு அவர் வருகிறார். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப் பட்டு, அவர் அந்த வரிசையின் வழியே வருகிறார்.

முன்னணைக் துணியில் சுற்றப்பட்ட குழந்தையுடன் அந்தச் சிறிய, நிந்திக்கப்பட்ட, மற்றும் நிராகரிக்கப்பட்ட பெண்ணின் முன் அவர் வரும்போது, அவர் அந்தக் குழந்தையைத் தன் கைகளில் எடுத்துக்கொள்கிறார், அவருடைய வெண்மையான தாடியிலிருந்து கண்ணீர் சொட்டுகிறது. அவர், "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியானை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர், உமது இரட்சிப்பை என் கண்கள் கண்டது" என்றார். என்ன ஒரு வித்தியாசம். ஆவியால் நடத்தப்பட்டார்.

21 மேலும் அந்த நேரத்தில், அன்னாள் என்ற பெயருடைய ஒரு வயதான தீர்க்கதரிசி யானவள் தேவாலயத்தில் இருந்தாள் என்று

நமக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. இறையியலா ளர்களால் நம்பப்படுவது என்னவென்றால், வரலாற்றின் படி, அவள் பார்வையற்றவள். அவள் தேவாலயத்திலேயே தங்கி, இரவும் பகலும், மக்களின் பாவங்களுக்காக ஜெபித்து, எப்போதும் ஜெபத்தை ஏறெடுத்துக் கொண்டிருந்தாள். அவள் அவருக்காகக் காத்திருந்தாள். பரிசுத்த ஆவியானவர் அவள் மேல் வந்தார். அவள் காத்திருந்தாள்.

இதோ அவள் வருகிறாள், பார்வை யற்றவளாக, மக்கள் மத்தியில் நகர்ந்து, இங்கே இவரை முட்டிக்கொண்டு. "என்ன விஷயம்?" பார்வையற்றவளாக வழிநடத்தப்பட்டு, அவள் வரிசையாக நகர்ந்து, அந்தப் பெண்களிடம் வருகிறாள். நேராக அந்த வரிசையில் வந்து, அவள் கிறிஸ்துவாகிய குழந்தையின் முன் நின்று, தன் கைகளை உயர்த்தி தேவனை ஸ்தோத்திரிக்கிறாள். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு, கிறிஸ்து வரப்போகிறார் என்று அவள் நம்பினாள். சிமியோன் அவரைப் பார்ப்பார் என்று பரிசுத்த ஆவியானவரின் சாட்சியைக் கொண்டிருந்தார்.



பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" என்றார். அது தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள்வது.

"உனக்கு அது கிடைக்கும் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"தேவன் அப்படிச் சொன்னார்."

ஒன்பது மாதங்கள் முடிந்தவுடன், குழந்தை பிறந்தது, ஏனென்றால் தேவன் அப்படிச் சொன்னார். "நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவை களைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்." தேவன் அப்படிச் சொன்னார்.

தேவனுடைய வார்த்தை சாத்தானை எங்கும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தோற்கடிக்கும். நீங்கள் அதை நம்புகிறீர்களா?

*28* இன்று மதியம் நான் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பற்றிப் பேசியபோது, பிதா அவருக்குள் இருந்தார், முழு தேவனும்—தனது வரங்களைத் தனது குமாரனுக்குக் கொடுத்தார், அது பூமியில்

"சரி," அவள் சொன்னாள், "கேள், எனக்கும் ஒரு குழந்தை பிறக்கப்போகிறது, ஏனென்றால் உனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என்று என்னிடம் சொன்ன அதே தேவ தூதன், நான் பரிசுத்த ஆவியால் நிழலிடப்படுவேன் என்று சொன்னார். என்னிடமிருந்து பிறக்கும் குழ ந்தை... அவருக்கு இயேசு என்று பேரிடுவேன்."

அந்த வாழ்த்து அந்தப் பெண்ணின் காதுகளில் விழுந்தவுடனே, தாயின் வயிற்றில் மரித்திருந்த அந்தச் சிறிய குழந்தை யோவான், சந்தோஷத்தால் துள்ளிக்குதிக்கத் தொடங்கினான். அப்படியே...

27 இயேசு கிறிஸ்து என்னும் நாமம் முதல் முறையாக மரணத்திற்குரிய உதடுகள் வழியாகப் பேசப்பட்டபோது, அது தாயின் வயிற்றில் மரித்திருந்த ஒரு குழந்தையை உயிருக்குக் கொண்டு வந்து, பரிசுத்த ஆவியின் முழுக் காட்டுதலைப் பெறச் செய்தது. அல்லேலூயா. அது ஒரு மரித்த குழந்தைக்கு அதைச் செய்யுமானால், அது மறுபடியும் பிறந்த சபைக்கு என்ன செய்ய வேண்டும்? எனக்குப் புரியவில்லை. ஓ, ஆஹா. அவர், "இவர்கள்



அன்று காலை சிமியோனை வழிநடத்திய, அன்று காலை அன்னாளை வழிநடத்திய அதே பரிசுத்த ஆவியானவர் தான், இன்று இரவு உங்களை இங்கே வழிநடத்திய அதே பரிசுத்த ஆவியானவர்.

22 நீங்கள் தெய்வீக சுகமளித்தலை நம்புகிறீர்கள், இல்லையா? இன்று நான் சொன்னது போல, ஆழம் ஆழத்தைக் கூப்பிடும் போது, அதற்கு பதிலளிக்க ஒரு ஆழம் இருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் தெய்வீக சுகமளித்தலை நம்பினால், எங்காவது ஒரு நீரூற்று திறக்கப்பட வேண்டியது நிச்சயம்.

அவர்களை அங்கு வழிநடத்திய அதே பரிசுத்த ஆவியானவர், உங்களை இங்கே வழிநடத்தியுள்ளார், நீங்கள் எங்கே...?... அவருடைய ஆவியின் அசைவாடுதல், அவர் நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் மாறாத வராயிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

அப்படியானால் ஆண்டவரே... ஓ, ஆஹா, இன்று இரவு இங்கே வேறு என்ன நடக்க முடியும்? தேவனுடைய ஆவியானவரால்

நடத்தப்பட்டு, தேவன் உங்களைக் குணமாக்கப் போகிறார் என்று நம்பி, குணமடையலாம் என்று எதிர்பார்த்து இங்கே வந்து அமர்ந்தி ருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் அப்படியா? இன்று இரவு உங்களில் எத்தனை நோயாளிகள் குணமடையலாம் என்று எதிர்பார்க்கிறீர்கள்? சரி. நீங்கள் அதைப் பெறப்போகிறீர்கள்: பெற்றாக வேண்டும். நீங்கள் அதை நம்பி எதிர்பார்க்கிறீர்கள், அது நடக்க வேண்டும். நான் தேவனை நம்புகிறேன், நீங்களா? நிச்சயமாக. அவர் சொல்வது சத்தியம். அதை-அதைப் புரிந்துகொள்ள முயற்சிக்காதீர்கள். விசுவாசி யுங்கள்.

**23** கர்த்தருடைய தூதன் சகரியாவைச் சந்தித்து, அவன் தன் மனைவியாகிய எலிசபெத்தின் மூலம் ஒரு மகனைப் பெறப் போகிறான் என்று அவனிடம் சொன்னதைக் கவனியுங்கள். "ஏன்," அவன் சொன்னான், "இந்தக் காரியங்கள் இருக்க முடியாது. அவளுக்கு மிகவும் வயதாகிவிட்டது, எனக்கும் வயதாகிவிட்டது."



இரண்டாம் நிலை உறவினர்கள். எலிசபெத் மரியாளின் முதல் நிலை உறவினர். அதனால் தூதன் அவளிடம் எலிசபெத்தைப் பற்றிச் சொன்னார். எனவே அவள் எலிசபெத்தைக் கண்டுபிடிக்க அங்கு செல்கிறாள். இதோ எலிசபெத் அவளைச் சந்திக்க வருகிறாள், அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். மேலும் அவள், "ஓ, நீ ஒரு தாயாகப் போகிறாய் என்று நான் அறிகிறேன்" என்றாள்.

"ஆம்" என்றாள். இப்போது, ஒரு கணம் இதை நாடகமாகப் பார்ப்போம். "ஆம், நான் ஒரு தாயாகப் போகிறேன். அது சரிதான்."

"உன் முதிர்வயதில் தேவன் உன்னைச் சந்தித்துள்ளார்."

"ஆம், எனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது. அது சரிதான். இப்போது எனக்கு ஆறு மாதம் ஆகிறது. ஆனால் எனக்கு சற்று பயமாக இருக்கிறது; இன்னும் எந்த ஜீவனும் இல்லை." பாருங்கள், அதெல்லாம் இயல்புக்கு மாறானது.

"நீ உறுதியாக இருக்கிறாயா?"

"நான் உறுதியாக இருக்கிறேன்."

"சரி, நீ ஜீவனை உணரவில்லை என்றால்; அங்கே ஒன்றுமில்லை. உனக்குக் குழந்தை பிறக்கும் என்று எப்படித் தெரியும்?"

"தேவன் அப்படிச் சொன்னார். அது காரியத்தை முடிவு செய்கிறது."

"நீ குணமடைவாயா?"

"ஆம், ஐயா."

"உன்னிடம் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா?"

"ஆம், ஐயா."

"அது என்ன?"

"தேவன் அப்படிச் சொன்னார்." அது சரிதான். அது எனக்குப் போதுமானது.

*26* அவளைப் பாருங்கள். அவள் அந்த...?... மேலே தன் உறவினரைப் பார்க்கச் செல்வதை நான் காண்கிறேன். யோவானும் இயேசுவும்



அவர் கூறினார், "நான் தேவசந்நிதியில் நிற்கிற காபிரியேல். என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால், குழந்தை பிறக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய், ஏனெனில் என் வார்த்தைகள் தகுந்தகாலத்திலே நிறைவேறும்."

பின்னர் குழந்தை பிறக்கும் நாள் வரை அவர் ஊமையாக்கப்பட்டார். அவர்கள் சொன்னார்கள்... அவர்கள் அவனுக்கு யோவான் என்று பெயர் வைத்தார்கள், அவனது தாய் வைத்தாள். அவர்கள் சொன்னார்கள், அவளை அழைத்து, அவனுக்கு எழுத ஒரு பலகையைக் கொடுத்தார்கள்; அவன் தன் பெயரைச் சொன்னான். அவன் இருக்க வேண்டும். அவனது பெயர் யோவான் என்று அவன் சொன்னான். தேவன் ஏற்கனவே அவனுக்குப் பெயரிட்டிருந்தார்.

*24* பின்னர் பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய தூதனாகிய காபிரியேல், நாசரேத்து பட்டணத்தில் சிறிய மரியாளிடம் செல்லும் போது, அவர் ஒரு—ஒரு விதவைக்கு கொடுத்தார்.

அவளோ கீழைத்திய நாட்டுப் பாணியில், அநேகமாகத் தலையில் தண்ணீரை வைத்துக் கொண்டு, துணி துவைக்க அதை எடுத்துக் கொண்டு, தெருக்களில் நடந்து சென்றாள். திடீரென்று அவள் முன் ஒரு ஒளி வீசுகிறது. அவள் நிற்கிறாள். "இது விசித்திரமாக இருக்கிறது," என்று அவள் நினைக்கிறாள்.

பின்னர் அந்த ஒளியில் ஏதோ ஒன்று உருவாகத் தொடங்குகிறது. அவள் அங்கே நிற்பதைப் பார்த்தாள், அங்கே பெரிய பிரதான தூதன் நின்றார். "கிருபை பெற்றவளே, வாழ்க" என்றார். அது அந்தச் சிறிய கன்னியைப் பயமுறுத்தியது. "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வ திக்கப் பட்டவள்" என்றார். அவள் பயந்து போனாள். அது உங்களைப் பயமுறுத்தும். அது என்னைப் பயமுறுத்தியது. அவர் அங்கே இருந்து சொன்னார், "புருஷனை அறியாத உனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது." அவள் அதைப் பற்றி வாதிடவில்லை. "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னை நிழலிடும். ஆதலால் பிறக்கும் பரிசுத்தம் உள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்றார்.



அவள், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்றாள். வாதிடுவதற்கும் கேள்வி கேட்பதற்கும் பதிலாக, சகரியாவைப் போலச் செல்வதற்குப் பதிலாக, அவள் தேவனுடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டாள். தேவனே, இன்று இரவு சீயோனுக்கு தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் சில மரியாட்களைத் தாரும்...

25 தனக்கு எந்தவொரு சரீரப்பிரகாரமான அறிகுறியும் தோன்றுவதற்கு முன்பே, புருஷனை அறியாத தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்று அவள் சாட்சி சொல்லிக் கொண்டு வெளியே சென்றாள். ஓ, ஆஹா. அவளிடம் என்ன இருந்தது? தேவனுடைய வார்த்தை. அவளுக்குத் தேவையானது அதுமட்டுமே. அவள் வெளியே சென்று, "எனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது" என்றாள்.

"நீ ஜீவனை உணர்ந்தாயா?"

"இல்லை, ஐயா."